# DEPOSITION OF WITNESS

## Chapter XXIII Code of Criminal Procedure

## In the Court of Judicial Magistrate No. II, Usilampatti

## CC.No.61/2016

## Deposition of Witness for PW8

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பழனிச்சாமி | Caste | : | |
| Father/Husband Name | : | கந்தவேல் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( Accused present )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 02.07.2026**

**முதல் விசாரணை**

நான் காவல்துறையில் பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். நான் கடந்த 11.04.2016ம் தேதி 15.30 மணிக்கு செக்காணூரனி காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது பாண்டியலிங்கம் கொடுத்த புகாரினை பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய கு.எண்.172-2016, பிரிவுகள் 341, 294(பி), 353, 355, 323, 506(2) இ.த.சவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் மேற்படி முதல் தகவல் அறிக்கையை கணம் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 11.04.2016ம் தேதி 16.30 மணிக்கு சம்பவ இட சாட்சிகள் கோபி, ராமர் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அவைகள் முறையே **அ.சா.ஆ.6** மற்றும் **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் பாண்டியலிங்கம், பகத்சிங், ஜானகி, குழந்தைவேல் மற்றும் மகஜர் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி ராஜாவை 11.04.2016ம் தேதி மீனாட்சிபுரம் ரயில்வே கேட் அருகே காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். மற்ற எதிரிகள் மாண்புமிகு மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமின் பெற்று நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளார்கள். புகார்தாரர்களுக்கு

சிகிச்சையளித்த மருத்துவர் வேல்முருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். பின்னர் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

## எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

புகார் எழுத்துமூலமாக கொடுக்கப்பட்டுள்ளது. புகாரில் சம்பவம் காலை 8.30 மணிக்கு நடந்ததாகவும், புகார் 3.30க்கு பதிவு செய்யப்பட்டதாக ஆவணங்களில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சம்பவத்தில் நடத்துநருக்கு காயம் இல்லை என்றால் சரிதான். எதிரிகள் மூவரும் அ.சா.1யை சட்டையை பிடித்து வாகனத்தின் ஓட்டுநர் பகுதியிலா அல்லது பயணிகள் படிக்கட்டுக்கள் பகுதியில் இழுத்தார்களா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ரத்தக்காயம் இருந்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். செருப்பு எதுவும் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. வரைபடத்தில் சாலையின் அருகே கடை வைத்திருந்தவர்களை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எதிரிகள் மூவரும் சாலையை பேருந்தின் முன்புறம் மறித்தார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கோ, எப்படியோ ஏற்பட்ட காயத்தை வைத்துக்கொண்டு எதிரிகள் அன்றைய தினம் பஸ்ஸில் பயணிக்கும்போது ஓட்டுநர் தவறாக நடந்துகொண்டதை தட்டிக்கேட்டதால் பழிவாங்கவேண்டும் என்ற நோக்கோடு பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரை, அவர் ஒரு அரசு ஊழியர் என்பதால் அதை அப்படியே வழக்குபதிவு செய்து ஆவணங்களை நிலையத்திலேயே தயாரித்து ஒருதலைபட்சமாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. செல்லம்பட்டியிலிருந்து கால் மணிநேரத்தில் செக்காணூரனிக்கு வந்துவிடலாம் என்றால் சரிதான். 6 மணி நேரம் காலதாமதமாக புகார் கொடுத்ததற்கான காரணம் சொல்லவில்லை என்றால் சரிதான்.